# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 17வது கூட்டம் 20-06-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 7 மணிக்கு பங்குதந்தையின் ஆரம்ப செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அன்றைய தினம் அருட் சகோதரி கார்மெல் ஜோன்பிள்ளை திருமதி கலிஸ்ரா தவராஜா திரு. சூசைமாணிக்கம், அலெக்ஸ், ஜீவன், அம்புறோஸ் மற்றும் செல்வன் சாள்ஸ் ஆகியோர் சமூகம் தரவில்லை. கடந்த மாத கூட்ட அறிக்கை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது கூட்ட அறிக்கையினை திரு.தேவா முன்மொழிந்தார் திரு. யூலியன் அவர்கள் வழி மொழிந்தார்.

மேலும் 03-07-2010 சனிக்கிழமை மாலை நான்கு மணித்திருப்பலியானது எமது மறைத்தளப் பங்கின் முதன் நன்மை பெறுகின்ற சிறுவர்களின் திருப்பலியாக அமைவதோடு எமது மீட்பின் அன்னை மறைத்தளத்திற்கு புதிய பங்கு குருவானவர் அருட்திரு யூட் அமலதாஸ் வருகின்ற திருநாளாகவும் அமைகின்றது. எனவே அதற்கான ஒழுங்குகளை பற்றியும் பங்குதந்தை எடுத்துக் கூறினார். அந்தவகையில் வரவேற்ப்பு சம்பந்தமான விடயங்கள் என்பனவற்றை திரு. தேவா அவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அன்றைய தினம் முதன் நன்மை திருப்பலியில் முதன்நன்மை பெறுகின்ற சிறுவர்களும் பெற்றோர்களுடன் குத்து விளக்கு ஏற்றி திருப்பலியினை முன்னின்று சிறப்பாக நிறைவேற்றுவார்கள் என்றும் பங்குதந்தை கூறினார். அருட்சகோதரி கார்மெல் அவர்களின் காரியாலயம் புதிய பங்குதந்தைக்கு ஒப்படைக்கப்பட்டு அதில் அவர் தொடர்ந்து இயங்குவார் என்றும் கூறினார்.

மேலும் அருட்சகோதரி கார்மெல் அவர்கள் யூலை மாதம் விடுமுறை செல்வதுடன் அந்த காலப் பகுதிகளில் பசாறை கவனித்து கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கூறினார். அத்தோடு பசாறுக்கு கமரா போடுவது பற்றியும் கலந்தரையாடப்பட்டது. அந்த வகையில் அதற்கு கமரா போடுவது என்றால் 1500$ - 2000$ வரைக்குள் செலவாகும் என்றும் கலந்துரையாடப்பட்டது. மேலும் பங்குதந்தை தான் செய்து வருகின்ற **port** வேலையையும் புதிய பங்குதந்தையிடம் அவரால் அதனையும் செய்யக் கூடுமானால் அதனையும் அவருக்கு பழக்க வேண்டும் என்றும் இல்லையானால் இன்னொருவருக்கு அதனை பழக்க வேண்டும் என்றும் பங்குதந்தை கூறினார். எங்கள் மறைத்தள மீட்பின் அன்னை பெருநாள் 04-07-2010 11:30 மணி திருப்பலியுடன் ஆலயத்தை சுற்றி கடந்த வருடம் இடம் பெற்றது போல சுற்றுப்பிரகாரம் இடம் பெறும் என்றும் பங்குதந்தை கூறினார்.

மடு மாதா பெருநாள் கடந்த ஆண்டு இடம்பெற்றது போன்று இந்த வருடமும் எங்கள் ஆலயத்தில் செய்வதாக தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு இந்த அறிவித்தலை பங்கு மக்களுக்கு வழங்கும்படியும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மாணவர்களுக்கு கதிரை மேசைகள் அடுக்குவது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. மாணவர்களுடைய வகுப்புகள் நடைபெற்று முடிந்த பின்னர் தளபாடங்கள் ஒழுங்கு முறைகள் வழமைபோல் காணப்படுவதில்லை என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 20-06-2010

அடுத்து சிறுவர் பாடகர் குளாம் உறுப்பினர்கள் தொடர்ந்து ஞாயிற்று கிழமைகளில் பாட வரலாம் என்றும் பெருநாள் முடிந்த பின்பு தொடர்ந்து வரும் ஞாயிற்று கிழமை திருப்பலிகளில் பாட வர வேண்டும் என்றும் திரு. தேவா அவர்கள் கூறினார். மேலும் பங்கின் பாடகர் குளாம் உறுப்பினர்களுக்கும், பீடப்பணியாளர்களும் வருடத்தில் ஒருமுறை ஒன்று கூடல் ஏற்படுத்தி அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து சிறப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் கோடை காலங்களில் எமது பங்கில் ஞாயிற்று கிழமைகளில் மாலை திருப்பலிக்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகிறது அத்தோடு பாடகர் குளாம் உறுப்பினர்கள் இரண்டு முறை வருவது கடினம் என்றும் திருப்பலி ஆயத்தம் செய்பவர் இரண்டுமுறை வந்த செய்ய வேண்டிய நிலமை காரணமாகவும் ஞாயிற்று கிழமை காலை 11:30 திருப்பலியினை மாத்திரம் வைப்பது சம்பந்தமாக கருத்துக்கள் தெரிவித்தார்கள். ஆனால் காலைத் திருப்பலிக்கு சிலர் தங்களுடைய வேலை சம்பந்தமாகவும், மற்றும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்களினாலும் மாலைத் திருப்பலிக்கு வருகிறார்கள். எனவே ஞாயிறு திருப்பலிகள் இரண்டும் இடம் பெறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் எங்கள் ஆலயத்தின் திருத்த வேலைப்பாடுகளுக்காக பயன்படும் வகையில் ஒரு சிறிய போக்கிளிப் ஒன்றினை கொள்வனவு செய்வது சம்மந்தமாக கலந்துரையாடப்பட்டது. ஆனால் அதனை நீண்ட காலம் பாவிப்பதில் சில நடைமுறை சிக்கல் காரணமாக அதனை கொள்வனவு செய்வதில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டது. இறுதியாக திருமதி யேசுமலர் தைரியநாதன் அவர்களின் இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது

| | |
|---|---|
| அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம் | திரு.நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |